IN THE COURT OF III ADDITIONAL DISTRICT COURT,
TIRUVALLUR AT POONAMALLEE

**O.S.34/2014**

Deposition of witness for the Defendant/DW4

Name :Saraswathi Date: 04.01.2023

Father's/Husband's Name: Ramamurthy

**<u>குறுக்கு விசாசணை தொடர்ச்சி</u>**

07/09/2009 தேதியிட்ட பாக பிரிவினை பத்திரத்தில் அனைவரும் கையொப்பமிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அன்றைய தேதியிலே சைதாப்பேட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் அந்த ஆவணம் பதிவிற்காக தாக்கல் செய்யப்பட்டது. அதற்கு, pending document No.13/2009 என்று கொடுக்கப்பட்டது. முத்திரை தீர்வை அதிகமாக செலுத்த வேண்டும் என்று மேற்கோள்காட்டி அந்த ஆவணத்தின் பதிவு நிலுவையில் வைக்கப்பட்டது. அந்த ஆவணத்தில் தாவா எப் அட்டவணை சொத்து ஏ அட்டவணையில் 8,9,10,11 மற்றும் 16 ஆகிய சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், மற்ற சொத்துக்களுடன் அவையும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கூறிய சொத்துக்கள் நான்கு சகோதரர்களின் பெயரில் உள்ள சொத்துக்கள் என்றால் சரிதான். மேற்கூறிய பாகப்பிரிவினை பத்திரத்தில் எனது அத்தை வனஜாவும் ஒரு தரப்பினர். அந்த பத்திரத்தில் உள்ள சொத்துக்கள் நான்கு சகோதரர்களுக்கு மட்டும் சொந்தமாக இருந்த நிலையில் வனஜாவை கூடுதலாக ஒரு தரப்பினராக சேர்க்கப்பட்டதால் கூடுதல் முத்திரை தீர்வை செலுத்த வேண்டும் என்று கோரப்பட்டது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. பெருமாள் அகரத்தில் உள்ள டி அட்டவணையில் ஐடம் எண்.6 சொத்து எனது மற்றும் எனது சகோதரி இரண்டாம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். இந்த சொத்தும் எனது கூட்டு குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது. நான் ஏற்றுக்கொள்ளப்பட்ட முதல் பதிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையில் பத்தி 20ல் டி அட்டவணை ஐடம் எண்.6 சொத்து கூட்டு குடும்ப சொத்து அல்ல என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 07/09/2009 தேதியிட்ட, பதிவு அலுவலகத்தில்

தாக்கல் செய்யப்பட்ட பாக பிரிவினை பத்திரத்தின் நகல் வா.த.சா.44 ஆகும். அதில் தாவா அனைத்து சொத்துக்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.த.சா.44ல் தாவா டி அட்டவணை 6ஆம் ஐடம் சொத்து குறிப்பிடப்படவில்லை. எனது கட்சிப்படி வா.த.சா.44 தான் 07/09/2009 அன்று சைதாப்பேட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்ட பாக பிரிவினை பத்திரதின் நகல் ஆகும். வா.த.சா.44ல் எனது கையொப்பம் இல்லை. சார் பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசலில் நான் கையொப்பம் இட்டுள்ளேன். 07/09/2009 அன்று சார் பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்ட நகல் வா.த.சா.44 அல்ல என்றும் நான் அது குறித்து பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த ஆவணத்தை பதிவுக்காக தாக்கல் செய்யப்பட்ட பின்னர் அதிகப்படியான முத்திரை தீர்வை செலுத்த வேண்டும் என்று கோரப்பட்டதால் அந்த ஆவணத்தை நாங்கள் திரும்பப் பெற்றோம் என்றால் சரியல்ல. அந்த பாக பிரிவினை பத்திரத்தில் பி மற்றும் சி அட்டவணை சொத்துகள் பற்றி குறிப்பிடப்படவில்லை எனறால் சரியல்ல. அந்த ஆவணத்தை பதிவு அலுவலத்திலிருந்து திரும்ப பெற்றது எனது தாயார் என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தை திரும்ப பெற்றதற்கும் 4 முதல் 9 பிரதிவாதிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், அந்த ஆவணத்தை திரும்ப பெறவில்லை. அந்த ஆவணத்தில் 4 முதல் 9 பிரதிவாதிகளுக்கு சம்பந்தம் உள்ளது. Pending Document No.13/2009 தற்போது யாரிடம் உள்ளது என்றால் 9ஆம் பிரதிவாதி தினகரிடம் உள்ளது என்று நான் கேள்விப்பட்டேன். அந்த பாக பிரிவினை பத்திரத்தின் படி அதிகப்படியான பங்கு கிடைக்கப்பெற்றது 4 முதல் 9 பிரதிவாதிகளுக்கு தான். இந்த Pending Document No.13/2009 சம்பந்தமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் எனது தாயார் ஒரு நீதிப்பேராணை மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த நீதிப்பேராணை மனு முடிவுக்கு வந்துவிட்டது. எனது தாயார் 9வது பிரதிவாதி மீது சென்னை மத்திய குற்றப்பிரிவில் புகார் கொடுத்தார். அந்த புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அந்த முதல் தகவல் அறிக்கை mistake of facts என்று குறிப்பிடப்பட்டு முடிவுக்கு வந்தது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எனது தாயார் மாவட்ட பதிவாளர் முன்னிலை நடைபெற்ற விசராணையில் ஆஜரானார். அந்த விசாரணையும் முடிவடைந்தது. எனது தாயாரின் கையொப்பத்தை மோசடி செய்து வாங்கப்பட்டது என்பது தான் எங்கள் தரப்பு வழக்கு. ஆவணத்தை திரும்ப பெறுவதற்கு

பதிவு அலுவலகத்தில் உள்ள ஆவணத்தை திரும்ப பெறுவதற்கான பதிவேட்டில் உள்ள எனது தாயாரின் கையொப்பத்தை ஒப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. இ -அட்டவணை 45 செண்ட் விஸ்தீரணம் கொண்ட இடம் சுப்பையா நாயுடுவின் பெயரில் உள்ளது. அதில் சுமார் 33,000சதுர அடியில் கட்டிடம் உள்ளது. சுப்பையா நாயுடுவின் மகன்களால் அந்த கட்டிடம் செலவழித்து கட்டப்பட்டது என்றால் சரியல்ல. அது கூட்டு குடும்ப வருமானத்தில் இருந்து கட்டப்பட்டது. எப் - அட்டவணை சொத்தின் பத்திரங்கள், வா.த.சா.34 மற்றும் 35 ஆகியவை சுப்பயை நாயுடுவின் நான்கு மகன்களின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். எப் அட்டவணை சொத்து, விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் பங்குதாரர் நிறுவனம், இ-அட்டவணை சொத்து ஆகியவற்றை கோவிந்தசாமி நிர்வாகம் செய்துவந்தார் என்றால் சரிதான். அது அல்லாமல் மற்ற சொத்துக்களையும் அவர் நிர்வகித்து வந்தார். பி.த.சா.6 கோவிந்தசாமிக்கு எப் அட்டவணை சொத்தை நிர்வாகம் செய்வதற்கு கொடுக்கப்பட்ட அதிகாரப் பத்திரம். அதில் நானும் கையொப்பமிட்டுள்ளேன் என்றால் சரிதான். பி.த.சா.4 மற்றும் 5 ஆகியவை இ அட்டவணை சொத்தை கோவிந்தசாமிக்கு நிர்வாகம் செய்வதற்கு கொடுக்கப்பட்ட பவர் பத்திரங்கள். அவற்றில் நானும் கையொப்பமிட்டுள்ளேன் என்றால் சரிதான். விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸில் பங்குதாரர் என்ற முறையிலும் இ மற்றும் எப் அட்டவணை சொத்துக்களை கூட்டு உரிமையாளர் மற்றும் அதிகாரம் பெற்ற முகவர் என்ற முறையிலும் நிர்வாகம் செய்து வந்தார் என்றால் அவர் குடும்பத்தின் surviving male member மற்றும் கர்த்தா என்ற முறையில் நிர்வகித்து வந்தார். இந்த கூற்று பி.த.சா.4, 5 மற்றும் 6 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பி.த.சா.4 ல் கோவிந்தசாமிக்கு விற்பனை செய்வதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இ அட்டவணை சொத்தில் 1995 முதல் 1998 வரை கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. பி.த.சா.7 மற்றும் 8 அடமானம் வைக்கப்பட்டு பணம் திரட்டப்பட்டு இ-அட்டவணை சொத்தில் கட்டிடம் கட்டப்பட்டது என்றால் சரிதான். பின்னிட்டு அந்த கடன்கள் பைசல் செய்யப்பட்டது. ஃபார்ம் 69ல் சுப்பையா நாயுடுவின் நான்கு மகன்களுக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்று சொல்லி தான் கையொப்பமிட்டு கொடுத்தோம் என்றால் எனக்கு ஞாபகமில்லை. 1998ல் இ அட்டவணை சொத்து கே.ஐ.எம்.எல் என்ற நிறுவனத்திற்கு வாடகைக்கு விடப்பட்டது என்றால் சரிதான். கோவிந்தசாமிக்கு பவர் கொடுக்கப்பட்டு அதன் பேரில் அவர் வாடகைக்கு விட்டார். தாவா இ மற்றும் எப் அட்டவணை

சொத்துக்களில் உள்ள வாடகை பணத்தை கோவிந்தசாமி பிரித்து கொடுத்தார் என்றால் சரியல்ல. எனக்கு கரூர் வைஷ்யா வங்கி திருவேற்காடு கிளையில் வங்கி கணக்கு இருந்ததா என்றால் இருந்திருக்கலாம், எனக்கு தெரியவில்லை. எனது தாயாருக்கும் சகோதரிக்கும் அதே வங்கி கிளையில் அக்கௌண்ட் இருந்ததா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. இ அட்டவணை சொத்து குறித்து வாடகை ஒப்பந்தம் 2007ல் இருந்து புதுப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். எப் அட்டவணை சொத்தில் 15 கடைகள் மற்றும் 1 வீடு உள்ளது. 2009லிருந்து எப் அட்டவணை சொத்திற்குரிய வாடகையை நாங்கள் தான் பெற்று வருகிறோம் என்றால் சரிதான். அந்த கடைகள் மற்றும் வீட்டிற்கான மாத வாடகை ரூ.4,00,000/- இருக்கும் என்றால் சரியல்ல அவற்றின் தற்போதைய மாத வாடகை ரூ.92,000/-. 2009லிருந்து தற்போது வரையிலான மாத வாடகைக்கான கணக்கு விவரங்களை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். 30/09/2009 அன்று 12ஆம் பிரதிவாதி வாடகை பாக்கியாக 9.65 லட்சம் ரூபாய் எனது சகோதரி இரண்டாம் பிரதிவாதிக்கு கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. சுப்பையா நாயுடுவின் சொத்தை விற்று 2005ல் 1 முதல் 3 பிரதிவாதிகளின் பங்கு தொகையாக ரூ.21,00,000 கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதை வைத்து தான் மதுரவாயலிலும் அரும்பாக்கத்திலும் நான் சொத்துக்கள் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. கோவிந்தசாமி உயிரோடு இருந்தவரை இ மற்றும் எப் அட்டவணை சொத்துக்கலில் இருந்து வந்த வருமானம் மற்றும் சுப்பையா நாயுடுவின் சொத்துக்களை விற்றதில் இருந்து வந்த வருமானம் ஆகியவற்றில் பங்குதாரர்களுக்கான பங்கு தொகையை கொடுத்து வந்தார் என்றால் சரியல்ல. சுப்பையா நாயுடு தனி நபராக தாக்கல் செய்த வருமான வரி ரிட்டன்ஸ் தான் பி.த.சா.20 முதல் 24 வரையிலானவை என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எனது தகப்பனார் இராமமூர்த்தி வருமான வரி துறைக்கு சமர்பித்த ஆவணம் பி.த.சா38 என்றால் சரிதான். பி.த.சா.38ன் படி இராமமூர்த்திக்கு ஜெனாய் நகரில் உள்ள சொத்தை வாங்குவதற்கு அவர் ரூ.15,000 செலவு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சொத்துக்கள் அனைத்தும் கூட்டு குடும்ப சொத்துக்கள் அல்ல என்றால் சரியரல்ல. பி மற்றும் சி அட்டவணை சொத்துக்கள் பக்தவச்சலு மற்றும் கோவிந்தசாமி ஆகியோரின் தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. மேலும் ஜி அட்டவணை சொத்து கோவிந்தசாமியின் தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. எப் அட்டவணை, எ-அட்டவணை ஐடம் எண்கள் 8,9,10,11 மற்றும் 16 ஆகியவற்றில் 10வது

பிரதிவாதிக்கு எந்த பங்கும் கிடையாது என்றால் சரியல்ல. 10ஆம் பிரதிவாதி வனஜாவின் மகன் தான் எனது கணவர். வாதிகளின் வழக்கை சார்ந்து எங்களது வழக்கை நடத்தினால், இராமமூர்த்தியின் வாரிசுதாரர்கள் என்ற முறையில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பாகமும் வனஜாவின் மகனின் மனைவி என்ற முறையில் எனக்கு பாகமும் கிடைக்கும் என்பதன் பேரில் தான் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.த.சா.44 உண்மையான ஆவணம் இல்லை என்றும் அது இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றும் சொன்னால் சரியல்ல. எனது பதிலுரைக்கு முரண்பாடாக எனது பிரமாணவாக்குமூலம் உள்ளது என்றும் ஆதலால் எனது சாட்சியம் ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

12ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை

(பிரதிவாதிகள் 7 முதல் 11 மற்றும் 13 முதல் 16 தரப்பின் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).